(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2024

# National Field Work Centre, Thondaimanaru.

5th Term Examination - 2024

FWC

| | | |
|---|---|---|
| வணிகக்கல்வி I<br>Business Studies I | Two Hours<br>Gr -13 (2024) | 32 T I |

**அறிவுறுத்தல்கள்:-**

சுட்டெண்: ……………………

- எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

## பகுதி – I

01) மனித தேவைகளும் விருப்பங்களும் பூர்த்தி செய்யப்படுவது,
(1) கட்புலனாககூடியவற்றின் ஊடாக
(2) கட்புலனாகதனவற்றின் ஊடாக
(3) கட்புலனாககூடிய மற்றும் கட்புலனாகதனவற்றின் ஊடாக
(4) வணிகங்களின் ஊடாக
(5) வளங்களின் ஊடாக (……….)

02) வதனன் என்பவர் தனது நிலத்தில் மல்லிகைச் செடிகள் நாட்டி அதற்காக அருகிலுள்ள பண்ணையிலிருந்து இயற்கைப் பசளையினை பெற்று, விளையும் மலர்களை இரு ஊழியர்களைக் கொண்டு மாலைகளாக கட்டி ஆலய வீதியில் விற்பனை செய்து வருகின்றார். அத்துடன் இணையவழி கட்டளைகளுக்கும் விநியோகம் செய்கின்றார். மேற்படி வதனின் முயற்சியினை பின்வருவனவற்றுள் எதுவாக நீர் கருதுகின்றீர்,
(1) முதன்னிலை வணிகம் (2) இரண்டாம் நிலை வணிகம்
(3) மூன்றாம் நிலை வணிகம் (4) வணிகக்கருமம்
(5) மேற்குறித்த எவையுமன்று (……….)

03) உலகில் தொழிற்பாட்டுக் கொண்டிருக்கும் அனைத்து வணிகக்கருமங்களையும் இரண்டு பொருளாதார கருமங்களாகவே கருதப்பட முடிவதுண்டு. பின்வருவனற்றுள் அத்தகைய கருமங்கள் எவை எனக் கருதுகின்றீர்,
(1) பொருட்கள், சேவைகள் (2) உற்பத்தி, விநியோகம்
(3) நுகர்பொருள், கைத்தொழில் பொருள் (4) வியாபாரம், வர்த்தகம்.
(5) விவசாயம், கைத்தொழில் (……….)



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

04) பின்வருவன சூழல் காரணிகள் சிலவற்றின் பொதுவான பண்புகள் ஆகும்.

$A$ - விரைவாக மாற்றமுறக் கூடியதும் நிச்சயமற்றதும்.

$B$ - சிக்கல் நிறைந்தும் போட்டித் தன்மையானதும்

$C$ - இடைத்தொடர்பு உடையதும், கட்டுப்படுத்த முடியாததும்

மேலே தரப்பட்ட பண்புகளினை உடைய சூழல் காரணிகளைக் கொண்ட தொகுதியாக அமைவது,

(1) உரிமையாளர், போட்டியாளர், பிரதியீட்டுப்பொருள், உற்பத்தியாளர்

(2) வழங்குனர், பூகோளச்சூழல், நிறுவன வளங்கள்

(3) பொருளாதார சூழல், சட்டச்சூழல், மக்கள் சூழல்

(4) முகாமையாளர், ஊழியர், நிறுவனக்கட்டமைப்பு

(5) நுகர்வோர், போட்டியாளர், நிறுவன கலாச்சாரம் (……….)

05) வணிகமொன்று சமூகப்பொறுப்புக்களுக்காக பெருமளவு நிதியினை வருடாந்தம் செலவிட்டு வருவதன் ஊடாக கட்டுப்படுத்த முடியாததும், நிச்சயமற்றதுமான சூழல் காரணிகளில் ஏற்படும் தாக்கமெனக் கருதப்படக் கூடியது பின்வருவனவற்றுள் எதுவெனக் கருதுகின்றீர்?

(1) வணிக நோக்கம் அடையப்படல்
(2) ஊழியர்களை கவர முடிதல்
(3) போட்டியாளர்களை வெல்ல முடிதல்
(4) நுகர்வோரின் விசுவாசம் உயர்வடைதல்
(5) அரச ஊக்குவிப்புக்களை பெற முடிதல் (……….)

06) வணிகங்களை வெற்றிகரமாக கொண்டு நடாத்துவது தொடர்பில் பல்வேறு விடயங்களை அரசு எதிர்பார்ப்பதுடன், அதற்கென பல்வேறு தலையீடுகளையும் அரசு மேற்கொண்டு வருவதுண்டு. இதன்படி அட்டவணை $X$ இல் எதிர்பார்க்கும் விடயங்களையும், அட்டவணை $Y$ இல் அரசின் தலையீடுகளும் காட்டப்படுகின்றன.

| $X$ | $Y$ |
|---|---|
| $A$ - சிறந்த தரமான சேவையினை வழங்குதல் | 1. நாடு முழுவதும் வீதிகளுக்கு காப்பெற் இடல் |
| $B$ - பெருமளவு வணிகங்கள் முதலீடுகளை இடுதல் | 2. வணிக வெளியீடுகளை கொள்வனவு செய்தல் |
| $C$ - வணிக செயற்பாடுகளை கட்டுப்படுத்தல் | 3. நிகரான வணிகக் கருமங்களில் ஈடுபடல் |
| $D$ - விற்பனை இலாப அளவுகளை ஊக்குவித்தல். | 4. உற்பத்தி, கம்பனி வரிகளை அறவிடல் |

$X$ இற்கும் $Y$ இற்குமான பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.

(1) $A-1$ , $B-2$ , $C-3$ , $D-4$

(2) $A-2$ , $B-4$ , $C-1$ , $D-3$

(3) $A-3$ , $B-1$ , $C-4$ , $D-2$

(4) $A-1$ , $B-3$ , $C-2$ , $D-4$

(5) $A-4$ , $B-1$ , $C-3$ , $D-2$ (……….)

07) “அரசு தனது பொருளாதார நோக்கங்களை அடைய நிதி மற்றும் இறைக் கொள்கைகளை கடைப்பிடித்து வருவதுண்டு” பின்வருவனவற்றுள் இறைக்கொள்கை கருவியாக கருதப்பட முடியாதது எது?

(1) தனிநபர் வருமானவரி
(2) சுங்கவரி
(3) பெறுமதி சேர்வரி
(4) சமூக சேவைச் செலவுகள்
(5) நியதி ஒதுக்கு வீதம் (……….)



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

08) வணிகமொன்றில், வாடிக்கையாளர்கள் சுட்டுத்துண்டில் உள்ள தகவல்களினை பரிசீலிப்பதற்கும் மற்றும் ஒப்பிட்டு கொள்வனவு செய்வதற்கும் வணிக உரிமையாளர்கள் மறுப்புத் தெரிவிக்கின்றனர். இது எத்தகைய நுகர்வோர் உரிமை மீறல் எனக் கருதுகின்றீர்?
(1) பாதுகாப்பினை ஏற்படுத்திக் கொள்வதற்கான உரிமை
(2) தகவலை அறிந்து கொள்வதற்கான உரிமை
(3) தெரிவு செய்வதற்கான உரிமை
(4) செவிமடுப்பதற்கான உரிமை
(5) இழப்பீட்டினைப் பெற்றுக் கொள்வதறகான உரிமை (……….)

09) கூற்று $A$ :− பங்குகளினை வழங்காது பொது நோக்கம் ஒன்றினை முன்வைத்து ஆரம்பிக்கும் அமைப்புக்களில் ஆகக் குறைந்தது இரு பங்குதாரரும் உச்ச எண்ணிக்கை வரையறையற்றும் காணப்படும்
கூற்று $B$ :− அரச திணைக்களங்கள் ஸ்தாபனக் கோவை, நிதிப்பிரமாணம் போன்ற அரச கொள்கைகளுக்கு கட்டுப்பட்டு கருமம் ஆற்ற வேண்டியிருப்பதுடன் சட்டத்தின் முன் தனிமனித அந்தஸ்தினைக் கொண்டிருப்பதில்லை.
மேற்படி இரண்டு கூற்றுக்களிலும்,
(1) இரண்டு கூற்றுக்களுமே சரியானவை.
(2) இரண்டு கூற்றுக்களுமே தவறானவை.
(3) கூற்று $A$ தவறானது, கூற்று $B$ சரியானது
(4) கூற்று $A$ சரியானது, கூற்று $B$ தவறானது
(5) $A$ யும் $B$ யும் சரியானது என்பதுடன் $A$ க்கும் $B$க்கும் தொடர்பு இல்லை (……….)

10) $Oxford$ ஆங்கில அகராதியின்படி முயற்சியாண்மைக்கான வரைவிலக்கணத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பது பின்வருவனவற்றுள் எதுவாகும்?
(1) மூலதனத்திற்கும் உழைப்புக்கும் இடையில் நடுவராக செயற்படல்
(2) நிச்சயமற்ற நிலைமைகளுக்கு முகங்கொடுக்கும் ஆற்றல்
(3) நடைமுறையில் உள்ள முறைமைகளை மாற்றியமைத்தல்
(4) சந்தர்ப்பமொன்றை ஏற்படுத்தி அதிலிருந்து நன்மைகளைப் பெறல்
(5) புதிய வணிகமொன்றை விரிவுபடுத்தி வெற்றிகரமாக நடாத்தும் ஆற்றல் (……….)

11) நகர்ப்புற பாடசாலையொன்றில் பரிசுத்தினத்தில் மாணவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்ட சில புத்தகசாலைகளில் புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கான பட்டியல் ($Vovucher$) வழங்கப்படுகின்றது. இது எத்தகைய பண வகையாக கருத முடியும்?
(1) சட்டப்பணம் (2) வங்கிப்பணம் (3) அண்மிய பணம்
(4) கடன் பணம் (5) இலத்திரனியல் பணம் (……….)

12) பின்வருவன இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் வங்கிகளின் சில முக்கிய பண்புகள் ஆகும்.
$A$ − நடைமுறைக்கணக்கினைப் பேண முடியாது
$B$ − பணவாக்கத்தில் ஈடுபடும்
$C$ − மத்திய வங்கியிடமிருந்து சாதாரண அனுமதி
$D$ − அந்நிய செலாவணிப் பரிமாற்றங்களில் ஈடுபட முடியும்
$E$ − மத்திய வங்கியில் பதிவு செய்ய குறைந்த மூலதனம்
மேற்குறிப்பிட்ட பண்புகளில் சனச அபிவிருத்தி வங்கியில் காணப்படக் கூடிய பண்புகளினை கொண்ட தொகுதியாக அமைவது எது?
(1) $A, B$ (2) $C, E$ (3) $B, D$ (4) $A, D$ (5) $A, E$
(……….)



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

13) ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள் $X$ அச்சிலும், அவற்றினது பண்புகள் $Y$ அச்சிலும் காட்டப்பட்டுள்ளன.

| $X$ | $Y$ |
|---|---|
| $A$. ஊழியர் சேமலாப நிதியம் $(EPF)$<br><br>$B$. ஊழியர் நம்பிக்கை நிதியம் $(ETF)$ | 1. தொழில் தருநரின் பங்களிப்பு மட்டும்<br>2. மத்திய வங்கியால் நிர்வகிக்கப்படும்<br>3. பதவி விலகும் போது மீளப் பெற முடியும்<br>4. தொழில் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும்<br>5. தொழில் தருநர், தொழில் பெறுநர் பங்களிப்பு<br>6. ஓய்வு வயதை அடைந்த பின் மீளப் பெற முடியும் |

$X,Y$ என்பவற்றை இணைக்கும் போது சரியான இணைப்பாக அமைவது,

(1) $A - 1,3,6$ $B - 2,4,5$
(2) $A - 1,4,6$ $B - 2,3,5$
(3) $A - 2,5,6$ $B - 1,3,4$
(4) $A - 3,5,6$ $B - 1,2,4$
(5) $A - 3,4,5,$ $B - 1,2,6$ (……….)

14) கட்டளைக் காசோலை தொடர்பிலான பின்வரும் கூற்றுக்களுள் பொருத்தமற்ற கூற்றினைத் தெரிவு செய்க.

(1) கொண்டு செல்லும் எவரையும் உரிமைதாரராகக் கருதி வங்கி பணத்தினை செலுத்தும்
(2) பெறுநர் பிறிதொருவருக்கு உரிமை மாற்றின் புறக்குறிப்பிடல் கட்டாயம்
(3) பாதுகாப்பு அதிகம்
(4) பெயர் குறிப்பிட்ட நபருக்கு மாத்திரம் வங்கி பணத்தினைச் செலுத்தும்.
(5) பெயர் குறிப்பிட்ட நபருடைய கணக்கில் வைப்பிலிடக் கூடியதாக இருத்தல் (……….)

15) காப்புறுதி தொடர்பிலான பின்வரும் கூற்றுக்களுள் மிகச்சரியான கூற்றினைத் தெரிவு செய்க.

(1) காப்புறுதி செய்ய முடியாத இடரொன்று பணத்தால் அளவிடப்படக் கூடியதாக இருத்தல் வேண்டும்
(2) காப்புறுதியினை இலாபங்களினை பரவலாக்குதல் எனவும் அழைக்க முடியும்
(3) ஆயுள் காப்புறுதியில் ஒப்பந்தம் செய்யும் போது உரிமை இருக்க வேண்டுமெனினும், இழப்பு ஏற்படும் போது அது அவசியமில்லை.
(4) அண்மிய காரணித்துவம் ஆயுட்காப்புறுதிக்கு பொருந்துவதில்லை
(5) காப்புறுதி நிறுவனம் ஒன்றினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இடர் ஒன்றினை வேறு காப்புறுதி நிறுவனம் ஒன்றில் காப்புறுதி செய்தல் ஒப்புறுதி என்பதாகும். (……….)

16) நவீன தொடர்பாடல் ஊடகங்களில் காணப்படும் சில அனுகூலங்கள் வருமாறு,

- செலவு குறைந்ததும் பாதுகாப்பானதும்
- ஒரே தடவையில் பலபேருக்கு தகவல்களை அனுப்ப முடிதல்
- காகிதப்பயன்பாடு குறைவடைவதுடன் உடனடிப் பின்னூட்டல் கிடைத்தல்

மேற்படி அனுகூலங்கள் யாவற்றையும் உள்ளடக்கியதான தொடர்பாடல் முறையாக கருதப்படக் கூடியது.

(1) அக இணையம் (2) ஞாபக குறிப்பு (3) இலத்திரனியல் மணி
(4) இலத்திரனியல் தபால் (5) உள்ளக தொலைபேசி (……….)



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

17) இன்று பெரும்பாலான வணிகங்கள் தமது நடவடிக்கைகள் சிலவற்றை வெளியார் மூலகங்களிலிருந்து பெற்றுக் கொள்ள முனைவதுண்டு. இவ்வாறு வெளி மூலங்களை பயன்படுத்துவதன் அனுகூலமாக கருதப்பட முடியாதது பின்வருவனவற்றுள் எதுவாகும்?
(1) செலவைக் குறைக்க முடிதல்
(2) நேரச்சிக்கனம்
(3) பாதுகாப்பு, நம்பகத்தன்மை தொடர்பில் கூடிய கரிசனைப்படல்
(4) பிரதான வணிக நடவடிக்கையில் கவனம் செலுத்த முடிதல்
(5) அவசர கட்டளைகளை நிறைவேற்ற முடிதல் (……….)

18) வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை குறித்த நாட்டிற்குள் கொண்டுவராது, துறைமுகத்தினுள் களஞ்சியப்படுத்தி மீண்டும் இன்னொரு நாட்டிற்கு அல்லது நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல் பின்வருவனவற்றுள் எவ்வாறு அழைக்கப்படும்,
(1) ஏற்றுமதி வியாபாரம்
(2) இறக்குமதி வியாபாரம்
(3) மறு/மீள் ஏற்றுமதி வியாபாரம்
(4) இறக்கியேற்றல் வியாபாரம்
(5) பல்பக்க வியாபாரம் (……….)

19) அண்மையில் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான உயர்தர வகுப்புக்கள் உடனடியாக ஆரம்பிக்கப்படுவதனால், கல்லூரியொன்றின் அதிபர் மாணவர்களுக்கு பின்வரும் கருத்தினை முன்வைத்தார்.
"நீங்கள் ஒவ்வொருவரும் சரியான பாடத்துறைகளை தெரிவு செய்வீர்களாயின் அடுத்துவரும் இரண்டு வருடங்களில் உமது இலக்குகளை உச்ச தரத்துடன் அடைய முடியும்"
மேற்படி கருத்தின் ஊடாக அதிபர் எடுத்துக்கூற முற்பட்ட முகாமைத்துவ எண்ணக்கரு எதுவாக இருக்குமெனக் கருதுகின்றீர்?
(1) வினைத்திறன் (2) பயனுறுதி (3) உற்பத்தித்திறன்
(4) சாதனை (5) செயற்றிறன் (……….)

20) ஆளுக்கேற்ற வேலையும், வேலைக்கேற்ற ஆளும் பொருத்தமுறுவதனை முகாமைத்துவ வலுக்களில் எத்தகைய வலுவாக கருத முடியும்,
(1) ஆளுமை வலு
(2) அதிகார வலு
(3) நிபுணத்துவ வலு
(4) செல்வாக்கு செலுத்தும் வலு
(5) உய்த்தறியும் வலு (……….)

21) கல்லூரியொன்று பாடங்கள் ஆரம்பிப்பதற்கான உலோக மணியினை நிறுத்தி, இலத்திரனியல் மின் மணியினைப் பொருத்துகின்றது. இச் செயற்பாடு கல்லூரி முகாமைத்துவக் கருமங்களில் எதுவாக கருதப்படும்
(1) திட்டமிடல் (2) ஒழுங்கமைத்தல் (3) நெறிப்படுத்தல்
(4) கட்டுப்படுத்தல் (5) தொடர்பாடல்
(……….)



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

22) செயல் முகாமைத்துவத்தில் இன்று இடம்பெறக் கூடுமென்கின்ற உற்பத்தி முறைகள் $X$ அச்சிலும், அவற்றிற்கான விபரணங்கள் $Y$ அச்சிலும் காட்டப்பட்டுள்ளன.

| $X$ | $Y$ |
|---|---|
| $A$ - வேலை உற்பத்தி | 1. ஒத்ததன்மை கொண்ட பொருட்கள் எல்லோருக்குமாக பெருமளவு உற்பத்தி செய்யப்படும். |
| $B$ - தொகுதி உற்பத்தி | 2. வாடிக்கையாளரின் சமகால கேள்விக்கேற்ப ஓர் உருப்படி உற்பத்தி செய்யப்படும். |
| $C$ - பாய்ச்சல் உற்பத்தி | 3. ஒரே தடவையில் ஒத்த சமமான பொருட்கள் மாற்றி மாற்றி உற்பத்தி செய்தல் |
| $D$ - செயன்முறை உற்பத்தி | 4. தடங்கல் ஏதுமின்றி இறுதி உற்பத்திவரை ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் உற்பத்தி செய்யப்படும். |

$X$ இற்கும் $Y$ இற்குமான பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.

(1) $A-4 \quad B-1 \quad C-3 \quad D-2$ (2) $A-1 \quad B-4 \quad C-2 \quad D-3$

(3) $A-3 \quad B-2 \quad C-4 \quad D-1$ (4) $A-2 \quad B-3 \quad C-1 \quad D-4$

(5) $A-3 \quad B-1 \quad C-4 \quad D-2$ (..........)

23) பின்வரும் உருப்படிகளில் இலாபநட்டமற்ற புள்ளிப் பகுப்பாய்விற்கு கருத்தில் கொள்ளப்படாத உருப்படியினை கொண்ட தொகுதி எதுவெனக் கருதுகின்றீர்.

(1) அலகுவிற்பனை விலையும், விற்பனை அலகுகளின் எண்ணிக்கையும்

(2) மூலப்பொருட் கொள்வனவும், விற்பனைத் தரகுகளும்

(3) ஊழியர்கட்கான மாதாந்த சம்பளமும், தொழிற்சாலைக் காப்புறுதிக் கட்டணங்களும்.

(4) நிலையான கிரயங்களும், மாறும் கிரயங்களும்

(5) பொருளாதார கட்டளை கணியமும், இருப்பு மட்டங்களும். (..........)

24) தரக்கட்டுப்பாட்டு முறைகளில் ஒன்றாகிய பூச்சியவழு என்பதனை சரியாகக் குறிப்பிடும் கூற்றினைத் தெரிவு செய்க.

(1) சிறிய அளவினரைக் கொண்ட ஊழியர் குழுக்கள் ஒன்று கூடி உற்பத்தி தொடர்பான பிரச்சினைகளைக் கலந்துரையாடுதல்.

(2) ஒவ்வொரு உற்பத்திப் பொருளும் குறைபாடுகளின்றி உற்பத்தி செய்யப்படுவதனை உறுதிப்படுத்துதல்.

(3) தேசிய மற்றும் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக உற்பத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

(4) உற்பத்தி செயன்முறையின் ஒவ்வொரு கட்டங்களிலும் உற்பத்திப்பொருளின் தரத்தை உறுதிப்படுத்தல்

(5) உரிய தரப்பினருடன் உற்பத்திச் செயன்முறையின் செயற்றிறன் குறித்து தொடர்பாடுதல்.

(..........)

25) ஒரு உற்பத்தியில் ஏற்படும் நட்டத்தினை, பிறிதொரு உற்பத்தியினூடாக ஈடு செய்வதற்கு சந்தைப்படுத்தல் முகாமையாளர் ஒருவர் பின்வருவனவற்றுள் எதன் மீது கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும்?

(1) உற்பத்தி மட்டங்கள் (2) உற்பத்திப் பொருள் வாழ்க்கைச் சுற்றோட்டம்

(3) உற்பத்திப் பொருட் கலவை (4) சேவைச் சந்தைப்படுத்தல் கலவை.

(5) முழுமையான சந்தைப்படுத்தல் எண்ணக்கருவில் (..........)



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

26) உற்பத்திப்பொருள் வாழ்க்கை வட்ட கட்டங்களில் பொருள் அறிமுக கட்டத்தின் போதான நிலைமையினை சுட்டிக்காட்டும் கூற்று பின்வருவனவற்றுள் எதுவாகும்?
(1) உயர்வான மேம்படுத்தல் செலவுகளினால் இலாப எல்லை குறைவடைதல்
(2) உற்பத்திகளோ அன்றி விற்பனைகளோ இடம்பெறுவதில்லை
(3) விற்பனைகளின் வேகம் உயர்வடைந்து செல்வதனால் இலாப எல்லை படிப்படியாக உயர்வடையும்.
(4) குறித்த பொருளில் நுகர்வோர் தெவிட்டல் நிலையினை அடைந்திருத்தல்
(5) விற்பனை துரிதமாக வீழ்ச்சியடைவதுடன் இலாப எல்லையும் பெருமளவு வீழ்ச்சியுறல்.

(……….)

27) நிதி முகாமைத்துவம் தொடர்பிலான இரு கூற்றுக்கள் வருமாறு,
கூற்று $A$ :– வணிக உரிமைதாரர்களின் வணிகத்தோடு இணைந்த பெறுமானத்தை உச்சப்படுத்துதலே நிதி முகாமைத்துவத்தின் அடிப்படை நோக்கமாகும்.
கூற்று $B$:– வரையறுத்த கம்பனியொன்றெனில் அதன் இரண்டாம் தரச்சந்தையில் பங்குகளின் விலை உயர்வடைந்து செல்லல்'' பெறுமான அதிகரிப்பினை எடுத்துக்காட்டுவதாகும்.
மேலே தரப்பட்ட இரண்டு கூற்றுக்களிலும்
(1) கூற்று $A$ சரியானது என்பதுடன் கூற்று $B$ தவறானதாகும்.
(2) கூற்று $B$ சரியானதுடன் என்பதுடன் கூற்று $A$ தவறானதாகும்.
(3) கூற்று $A$ யும் $B$யும் சரியானது என்பதுடன் கூற்று $A$ யினூடாக $B$ வலியுறுத்துப்படுகின்றது.
(4) கூற்று $A$ யும் $B$யும் தவறானது என்பதுடன் கூற்று $B$ யினூடாக $A$ வலியுறுத்தப்படவில்லை.
(5) இரண்டு கூற்றுக்களுக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லை (……….)

28) கம்பனி ஒன்றின் நிதிமுகாமையாளர் கம்பனியின் எதிர்கால செயற்றிட்டத்திற்கான நிதித் தேவை தொடர்பில் பின்வரும் கருத்தை முன்வைத்தார்.
- உரிமைகள் பரவலடைதல் நிர்வாகச் சிக்கல்களை தோற்றுவிக்கும்.
- வணிகத்தின் பொறுப்பு அதிகரிப்பதுடன், நிதிக்கான கிரயங்களும் அதிகரிக்கும்.

மேற்படி வரையறைகளிலிருந்து தவிர்த்துக் கொள்வதற்கு, பின்வரும் நிதி மூலங்களில் எவற்றை நாடுவது சிறந்ததென நீர் கருதுகிறீர்,

(1) பங்கு வழங்கல் (2) தொகுதிக் கடன்வழங்கல் (3) வங்கிக்கடன்
(4) மேலதிக சொத்து விற்பனை (5) குத்தகை (……….)

29) தனியார் பாடசாலையொன்றில் அண்மைய ஆண்டுகளில் ஓய்வு பெற்றுச் சென்ற பல ஆசிரியர்களுக்குப் பதிலாக புதிய ஆளனியினரை திரட்டுவதில் பல்வேறு தடைகளினை முகாமை எதிர்கொள்வதுடன், ஓய்வு பெற்றுச் சென்றவர்களை மீண்டும் ஒப்பந்த அடிப்படைகளில் பணிக்கு அமர்த்தியுள்ளது. இது பாடசாலையின் மனதவளம் தொடர்பில் எப்பிரச்சினையாக கருதமுடியும்
(1) மனிதவள திட்டமிடல்
(2) வேலை வடிவமைப்பு
(3) செயற்றிறன் மதிப்பீடு
(4) பயிற்சியும் அபிவிருத்தியும்
(5) தொழில் அறிமுகப்படுத்தல்

(……….)



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

30) நிறுவனமொன்றின் பொது முகாமையாளர், தனது மனதவள முகாமையாளருடனான கலந்துரையாடலில் பின்வரும் கருத்தினை எடுத்துக் கூறினார். "எமது நிறுவனத்தில் அண்மையில் பணியில் அமர்த்தப்பட்ட கீழ்மட்ட பணியாளர்கள், நாளாந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் சில தடைகளை எதிர்கொள்கின்றனர். இவர்களுக்கு குறைந்த செலவுடன் குறுங்கால தயார்படுத்தல்களை உடனடியாக மேற்கொள்ளல் வேண்டும்."
மேற்படி கருத்தின் ஊடாக எத்தகைய திறனை, என்ன நடவடிக்கையூடாக எடுக்க வேண்டுமென நீர் கருதுகின்றீர்?

(1) எண்ணக்கருத்திறன் - அபிவிருத்தி நடவடிக்கை

(2) மானிடத்திறன் - மதிப்பீட்டு நடவடிக்கை

(3) தீர்மானமெடுக்கும் திறன் - மனப்பாங்கு நடவடிக்கை

(4) முயற்சியாண்மைத்திறன் - கல்வி நடவடிக்கை

(5) தொழில்நுட்பத்திறன் - பயிற்சி நடவடிக்கை (……….)

❖ **31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களிலுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களை இட்டு பூரணப்படுத்துக.**

31) அ) கைத்தொழில் புரட்சி காரணமாக ______________________, ______________________ நடவடிக்கைகளில் பாரியளவு மாற்றங்கள் ஏற்பட்டன.

ஆ) மாஸ்லோவின் தேவைக் கோட்பாட்டிற்கு அமைவாக எல்லோருக்குமே பொதுமான தேவைகள் ______________________ எனவும், தொழிலில் நிரந்தரத்தன்மையினை வேண்டி நிற்றல் ______________________தேவையாகவும் கருதப்படுவதுண்டு.

32) அ) வரையறுத்த பொதுக்கம்பனியின் பங்குதாரர்களது வாக்களிக்கும் உரிமையினை ______________________விபரிக்கும் அதேவேளை வரையறுத்த கூட்டுறவு வணிகமொன்றின் அங்கத்தவர்களது வாக்களிக்கும் உரிமையினை ______________________ விபரிப்பதுண்டு.

ஆ)2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச்சட்டத்தின் கீழ் நாணய சபையின் இரு பெரும் கட்டமைப்புக்களாக ______________________, ______________________ என்பன கருதப்படுவதுண்டு.

33) அ) கோடுகளின்றி வணிகவங்கியொன்றின் பெயரை காசோலையின் முகப்பில் குறுக்காக எழுதுதல் ______________________எனவும், அவ்வாறு இடப்பட்ட பெயரினை நீக்கும் அதிகாரம் ______________________மாத்திரமே இருப்பதுண்டு.

ஆ) ஏற்றுமதிக்காக ஏற்றுமதிப்பண்டங்கள் பல்வேறு இடங்களில் ஒப்படைக்கப்படுகையில், அவை தம்மால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டு உரிய அதிகாரிகளினால் வழங்கப்படும் ஆவணங்கள் ______________________, ______________________ என்பனவாகும்.

34) அ) தீர்மானமெடுத்தல் செயன்முறையில் மிகமுக்கியமானதாக ______________________ கருதப்படுகையில் மிகப் பொருத்தமாக தீர்மானம் எடுத்தலை இலகுபடுத்துவதாக ______________________ கருதப்படுவதுண்டு.

ஆ) வழங்கப்பட்ட கருமங்களை பூரணப்படுத்துவதற்கு உதவியாளர்களுக்கு முறையாக ______________________, ______________________ஒப்படைக்கும் கருமம் ஒழுங்கமைத்தலில் மிக கவனமாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

35) அ) பொருட்களுக்கான விலை குறிக்கும் பொழுது அதன் கிரயம் தவிர்ந்த வேறு முக்கிய காரணிகளாக ______________________, ______________________ என்பவற்றை குறிப்பிடுவார்.



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

ஆ) சேவைச் சந்தைப்படுத்தலில் ஈடுபடுபவர்கள் தமது விற்பனை படை (*salesforce*) மட்டுமன்றி ____________________________, ____________________________என்பவற்றின் மீதும் கூடிய கரிசனை செலுத்துவதுண்டு.

36) அ) தேவைப்படும் நிதியினை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது தொடர்பான தீர்மானம் ____________________________எனப்படுவதுடன் பெறப்பட்ட நிதியினை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பான தீர்மானம் ____________________________எனவும் கருதப்படுவதுண்டு.

ஆ) நிலையான மூலதனங்களை திரட்டும் இரு மூலங்கள் ____________________________, ____________________________ என வகைப்படுத்துவதுண்டு.

37) அ) வரையறுத்த கம்பனியொன்று முதன்முறையாக முன்விபரணத்தினை வெளியிட்டு அதனூடாக பங்குகளையும், தொகுதிக்கடன்களையும் முதலீட்டாளர்களுக்கு வழங்குதல் ____________________________ எனவும், ஏற்கனவே தொழிற்பாட்டுக் கொண்டிருக்கும் கம்பனியொன்று தனது மூலதனத்தினை அதிகரித்துக் கொள்வதற்காக இடைக்காலத்தில் பங்குகளை வழங்குதல் ____________________________எனவும் அழைக்கப்படும்.

ஆ) கம்பனியின் கூறப்பட்ட மூலதனத்தில் அதிகரிப்பினை ஏற்படுத்தும் சந்தை ____________________________ என அழைக்கப்படுவதுடன், கூறப்பட்ட மூலதனத்தில் அதிகரிப்பினை ஏற்படுத்த மாட்டாத சந்தை ____________________________ எனவும் அழைக்கப்படும்.

38) அ) ஒதுக்கங்களை மூலதனமாக்கல் செயற்பாட்டின் போது கம்பனிகளின் ____________________________ அதிகரிக்கும் எனினும் ____________________________ அதிகரிக்கப்படமாட்டாது.

ஆ) குறுங்கால நிதிக்கடப்பாடுகளுக்கு அல்லது பொறுப்புக்களுக்கு முகங்கொடுக்கும் இயலுமையினைச் சுட்டிக் காட்டும் விகிதங்கள் ____________________________, ____________________________ என இரு வடிவங்களில் கணிப்பிடப்படுவதுண்டு.

39) அ) நிறுவனமொன்றின் வேலைகளுக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளை கவருகின்ற செயன்முறை ____________________________என அழைக்கப்படுவதுடன், வந்த விண்ணப்பங்களிலிருந்து மிகப்பொருத்தமானவர்களை இனம் காணும் செயன்முறை ____________________________ எனவும் அழைக்கப்படும்.

ஆ) நிறுவனமொன்றில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு அதிக காலங்களும், அதிக கிரயங்களும் ஏற்படுவதனை தவிர்ப்பதற்கு பயன்படுத்தக் கூடிய ஆட்சேர்ப்பு முறையாக ____________________________ கருதப்படுவதுடன், இதன் மூலம் தற்போதைய ஊழியர்கள் பெரும்பாலும் ____________________________ படுவதுண்டு.

40) அ) உள்ளக ஆட்சேர்ப்பு முறைகளாக ____________________________ பரிந்துரைகள் ____________________________திட்டம் ஆகியன பயன்படுத்தப்படுவதுண்டு.

ஆ) யாதேனும் குறிப்பிட்ட நோக்கமொன்றை நிறைவேற்றுவதற்காக வேலையொன்றை உருவாக்குதல் அல்லது தோற்றுவித்தல் என்பது ____________________________ என்பதுடன் இதனை மிக தெளிவாக முன்வைக்கையில் அது ____________________________என கருதப்படுவதுண்டு.



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

❖ ***41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடைகளைத் தரப்பட்டுள்ள இடைவெளிகளில் எழுதுக.***

41) தகவல் தொழிநுட்ப வளர்ச்சி காரணமாக வணிகத்துறையில் ஏற்பட்ட நவீன போக்குகள் நான்கினைத் தருக.

(1) ______________________________

(2) ______________________________

(3) ______________________________

(4) ______________________________

42) தனியார் துறையில் உள்ள கம்பனிகளுக்கும், அரச கம்பனிகளுக்கும் இடையிலான நான்கு ஒற்றுமைகளினைத் தருக.

(1) ______________________________

(2) ______________________________

(3) ______________________________

(4) ______________________________

43) நிதியியல் நிறுவனங்களுக்கு செயற்கை நுண் அறிவின் (AI) நன்மைகள் நான்கினை தருக.

(1) ______________________________

(2) ______________________________

(3) ______________________________

(4) ______________________________

44) அலங்கார உலோக வார்ப்பு வணிகமொன்றை ஆரம்பித்துள்ள கபில் என்பவர் அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய இரண்டு சேவைகளையும், அத்தகைய சேவைகளினை வழங்கும் நிறுவனங்கள் இரண்டினையும் தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடுக.

| சேவைகள் | நிறுவனங்கள் |
|---|---|
| 1) ______________________ | ______________________ |
| 2) ______________________ | ______________________ |

45) கட்டுப்பாட்டின் விசால அளவினை தீர்மானிக்கையில் செல்வாக்குச் செலுத்தும் நான்கு காரணிகளினைத் தருக.

(1) ______________________________

(2) ______________________________

(3) ______________________________

(4) ______________________________



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

46) நிறுவன முகாமைத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்ற கட்டுப்பாட்டு நுட்பமுறைகள் தொடர்பிலான இரண்டு கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

கூற்று $A$: – எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளை தவிர்ப்பதற்காக எடுக்கப்படும் கட்டுப்பாடு

கூற்று $B$: – எதிர்பார்க்கப்பட்ட செயற்திறனுக்கும் , உண்மைக்கும் இடையில் விலகல் தென்பட்டதன் பின்னர் சீராக்கும் கட்டுப்பாடு

மேலே தரப்பட்ட கூற்றுக்களிலிருந்து அவை ஒவ்வொன்றும் எத்தகைய கட்டுப்பாட்டு நுட்ப முறை எனவும், அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணமும் தருக.

| கூற்று | கட்டுப்பாட்டு நுட்பமுறை | உதாரணம் |
|---|---|---|
| $A$ | 1) ______________________ | 3) ______________________ |
| $B$ | 2) ______________________ | 4) ______________________ |

47) மூலப்பொருள் உற்பத்தித்திறனை மேம்படுத்தக்கூடிய முறைகள் நான்கினைத் தருக.

(1) ______________________________________________

(2) ______________________________________________

(3) ______________________________________________

(4) ______________________________________________

48) $S \& P$ இலங்கை 20 சுட்டியினை கணிப்பிடுவதற்காக கம்பனிகளினைத் தெரிவு செய்வதற்கு கொழும்பு பங்கு பரிமாற்றகத்தினால் பயன்படுத்தப்படும் நியதிகள் நான்கினைத் தருக.

(1) ______________________________________________

(2) ______________________________________________

(3) ______________________________________________

(4) ______________________________________________

49) நிறுவனங்களில் மிக முக்கிய வளமாக கருதப்படும் மனிதவளத்தினை கையாளும் மனிதவள முகாமையின் பொது நோக்கங்கள் நான்கினைத் தருக.

(1) ______________________________________________

(2) ______________________________________________


(3) ______________________________________________

(4) ______________________________________________



kalvi.lk

50) பின்வரும் வரைபடத்தில் (1) ,(2) ,(3) ,(4) ஆகிய இடைவெளிகளில் நிறுவனமொன்றினால் பயன்படுத்தக் கூடிய பொருத்தமான சந்தைப்படுத்தல் கலவை மாறியினை குறிப்பிடுக.




(1) ______________________________

(2) ______________________________

(3) ______________________________

(4) ______________________________

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2024

# National Field Work Centre, Thondaimanaru.

FWC

## 5th Term Examination - 2024

| | | |
|---|---|---|
| வணிகக்கல்வி - II<br>Business Studies - II | Three Hours 10 Min.<br>Gr -13 (2024) | 32 T II |

❖ வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

❖ ***அறிவுறுத்தல்கள்:***
ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி - அ

**(01)** பாடசாலைக்கல்வியினை நிறைவு செய்த றுபனாஸ், வினிசன் ஆகிய இருவரும் இணைந்து "*Multy Pet Paradise & Co*" எனும் பெயரில் வீடுகளிலும், நிறுவனங்களிலும் வளர்க்கக் கூடிய செல்லப் பிராணிகளினை விற்பனை செய்யும் வணிகமொன்றை கண்டி வீதி யாழ்ப்பாணத்தில் உருவாக்கி நடாத்தி வருகின்றனர். இவர்களது மேம்படுத்தல் உத்திகள் மற்றும் வளர்ப்புத் தொடர்பிலான தகுந்த விற்பனைக்கு பிந்திய ஆலோசனைகள் காரணமாக ஆரம்பிக்கப்பட்ட சிறிது காலத்திலேயே மிகப்பிரபலமாகி வருகின்றது. எனினும் தற்போது போட்டியாளர்கள் சிலர் ஊடுருவி இருப்பதும் நகரப் புறத்தில் வாழ்வோர் இடநெருக்கடி காரணமாக செல்லப்பிராணிகளை வளர்ப்பதில் ஆர்வம் இல்லாதிருப்பதும், இவர்களது விற்பனையில் சற்று வீழ்ச்சியினை காட்டி வருகின்றது.

i) அ) "*Multy Pet Paradise & Co*" எத்தகைய வணிகவகை எனவும், அது பதிவு செய்யப்பட வேண்டிய சட்டத்தினையும் குறிப்பிடுக.

ஆ) மேற்படி வணிகம் வணிகமொன்றாக கருதப்படுவதற்கு அதில் காணப்படத்தக்க நான்கு பண்புகளினைத் தருக.

ii) அ) மேற்படி வணிகம் மனித தேவையினையே பூர்த்தி செய்வதாக ‘‘சியான்’’ என்ற மாணவர் குறிப்பிடுகின்றார். அவ்வாறெனில் அது எத்தகைய தேவை என கருத முடியும். காரணம் தருக.

ஆ) மேற்படி வணிகம் மனித விருப்பங்களையே பூர்த்தி செய்வதாக ‘‘அஸ்வின்’’ என்ற மாணவர் குறிப்பிடுகின்றார். மேற்படி மாணவனின் கூற்றுடன் உடன்படுகின்றீரா? விளக்குக.

iii) அ) மேற்குறித்த வணிகத்தின் உரிமையாளர்கள் தமது வணிக செயற்பாட்டிற்கு உதவியாக 18 வயதிலும் குறைந்த அனோஜன் என்பவரை புதிய உரிமைதாரராக இணைக்கின்றனர். அனோஜன் இவ்வணிகத்தில் எத்தகைய உரிமைதாரர் எனவும், அவரின் பண்புகள் மூன்றினையும் தருக.

ஆ) *Multi Pet Paradise* வணிகம் தனது செயற்பாடுகளை விஸ்தரிக்கும் பொருட்டு, மிருக வைத்திய நிலையம் மற்றும் வளர்ப்பு கூடுகளினை தயார் செய்யும் தச்சுத் தொழிலகம் என்பவற்றுடன் இணைந்து தொழிற்பட எண்ணுகின்றது. மேற்குறித்த இணைப்புக்கள் எத்தகைய வணிக இணைப்பு எனக் கருதுகின்றீர்? காரணம் தருக.



kalvi.lk

iv) *Multi Pet Paradise* வணிக நடவடிக்கைகள் மீது செல்வாக்கு செலுத்தக்கூடிய விசைகள் நான்கினையும் அவ்விசைகள் செல்வாக்குச் செலுத்துவதற்கான தலா ஒரு காரணத்தையும் தருக.

v) மேற்குறித்த வணிக அமைப்பில் காணப்படும் இரு வணிக பலங்களையும் இருஅச்சுறுத்தல்களையும் குறிப்பிடுக.

(5 x 4 = 20 புள்ளிகள்)

***(02)***

i) தற்போது நாடுதழுவிய ரீதியில் பொதுமக்கள் பலரும் சூரியமின்கலப்பாவனை செயற்றிட்டங்களில் (*Solar Project*) முதலீடு செய்வதில் அதிக ஆர்வம் செலுத்தி வருவதனை முதலீட்டு அறிக்கைகள் வெளிப்படுத்துகின்றன.

அ) சூரிய மின்கலங்களில் முதலிடுவதனால் முதலீட்டாளர்களுக்கு கிடைக்கும் நன்மைகள் நான்கினைத் தருக.

ஆ) சூரிய மின்கலப்பாவனை அதிகரிப்பதனால் இலங்கைப் பொருளாதாரத்திற்கு கிடைக்கும் நன்மைகளைத் தருக.

ii) கடந்த கல்லூரி விடுமுறைக்காலத்தில் கல்லூரி ஒன்றின் வணிக மாணவர்கள் இணைந்து விழிப்புலவலுவிழந்த மாணவர்களினைக் கொண்ட இல்லம் ஒன்றிற்கு ஆசிரியரின் வழிகாட்டலில் சென்று திரும்பியிருந்தனர்.

அ) விழிப்புல வலுவிழந்த மாணவர்களை தரிசிப்பதன் ஊடாக கல்லூரி மாணவர்களுக்கு கிடைத்திருக்கக் கூடுமென்கின்ற சிறந்த விழுமியங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

ஆ) கல்லூரி மாணவர் வருகையினால், இல்லப்பிள்ளைகளுக்கு கிடைத்திருக்கக் கூடுமென்கின்ற நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

iii) "வரையறுத்த கம்பனியொன்றின் இயக்குனர்களது நோக்கங்களுக்கும், கம்பனி பங்குதாரர்களது நோக்கங்களுக்கும் இடையில் முரண்பாடுகள் நிலவுவதாக ஆண்டுப் பொதுக்கூட்டங்களில் எடுத்துக் கூறப்படுவதுண்டு" மேற்படி கூற்றுடன் நீர் இணங்குவீராயின், முரண்பாட்டிற்கான காரணமொன்றினூடாக விபரிக்குக.

iv) அங்கீகாரம் பெறுபவரின் பாதகமான செயற்பாடுகள் காரணமாக, அங்கீகாரம் வழங்குபவரின் நன்மதிப்பு இடையில் பாதிப்பிற்கு உள்ளாவதுண்டு. எத்தகைய செயற்பாடுகள் வழங்குபவரின் நன்மதிப்பினை பாதிக்கும் என்பதற்கு நான்கு காரணங்களினைத் தருக.

v) அஜின், மது, யது ஆகிய மூவரும் இணைந்து சற்று வித்தியாசமான முறையில் சிந்தித்து *AMY Suprise gift* எனும் பெயரில் வணிக முயற்சி ஒன்றினை ஆரம்பித்து அதிர்ச்சி தரும் வகையில் பரிசில்களை அனுப்புபவரிடம் இருந்து பெறுபவருக்கு வழங்கிவரும் செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர்.

அ) இம்முயற்சியில் பரிசில்களை கொள்வனவு செய்வதற்கும், விநியோகிப்பதற்கும் வணிக வெளிமூலங்களை பயன்படுத்துவதனால் எதிர்நோக்கும் சவால்கள் நான்கினைத் தருக.

ஆ) சவால்கள் இருப்பினும், அவற்றை வெற்றி கொண்டு வணிகம் வளர்ச்சியடைவதற்கு வெளிமூலங்கள் பங்காற்றுவதாக இயங்கும் பங்காளர் யது குறிப்பிடுகின்றார். இதன்படி வெளிமூலங்களின் அனுகூலங்கள் நான்கினைத் தருக.

(5 x 4 = 20 புள்ளிகள்)




kalvi.lk

**(03)**

i) "இன்று சிறிய சில்லறை வியாபாரங்களில் கூட இலத்திரனியல் பணக்கொடுக்கல் வாங்கல்களினை காணமுடிகின்றது." இலத்திரனியல் பணக்கொடுக்கல் வாங்கல்களினால் வாடிக்கையாளருக்கு ஏற்படக் கூடிய நன்மைகள் நான்கினைத் தருக.

ii) வணிகர் ஒருவரால் பிறப்பிக்கப்பட்ட காசோலையொன்றின் மாதிரி வடிவம் கீழே தரப்படுகின்றது.


இலங்கை வங்கி
சாவகச்சேரி.

பெறுவோன் கணக்கு மட்டும்
மக்கள் வங்கி, வவுனியா.

| 0 | 1 | 0 | 8 | 2 | 0 | 2 | 4 |
|---|---|---|---|---|---|---|---|

Pay உ. சிந்துஜன் ~~அல்லது கொண்டுவருபவரிடம்~~
ரூபா முப்பதினாயிரம் மட்டும் **30,000/=** செலுத்தவும்

J.ஜெஸ்லி டேவிட்
-----------------------------------

0165170 ; 7010 ; 501 ; 003249927

அ) காசோலையுடன் தொடர்புடைய தரப்பினர்களை காசோலையிலிருந்து குறிப்பிடுக.

ஆ) மேற்படி காசோலை எந்த வங்கியில் பணமாக்கப்பட முடியும்?

இ) மேற்படி காசோலையில் நடைமுறைக்கணக்கிலக்கம் எது?

ஈ) மேற்படி காசோலையினை சிந்துஜன் பிறிதொருவருக்கு சாட்டுதல் செய்ய முடியுமா? காரணம் தருக.

உ) இக்காசோலையின் குறுக்குக்கோடிடலின் வகை எத்தகையது?

iii)

அ) வாடிக்கையாளர் ஒருவர் இலத்திரனியல் அட்டை ஒன்றினைப் பெறுவதற்கு வங்கியொன்றிற்கு விண்ணப்பிக்கின்றார். எனினும் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதாக வங்கி அறிவிக்கின்றது. இதற்கான காரணங்களாக நீர் எவற்றை கருதுகின்றீர்?

ஆ) காசோலை அடியிதழ் மூலம் நடைமுறைக்கணக்கு உரிமையாளருக்குக் கிடைக்கும் நான்கு அனுகூலங்களைத் தருக.

iv) காப்புறுதி செய்யக்கூடிய இடரிலிருந்து, காப்புறுதி செய்ய முடியாத இடர் எவ்வாறு வேறுபடுகின்றது என்பதற்கு நான்கு வேறுபாடுகளினைத் தருக.

v)

அ) வணிக நடவடிக்கைகளில் இன்று விளம்பரப்படுத்தலுக்கு முகநூலினை (Facebook) பயன்படுத்துவது முக்கியத்துவம் பெற்று வருவதற்குரிய நான்கு காரணங்களினைக் குறிப்பிடுக.

ஆ) "எழுத்து மூல தொடர்பாடல்களினைக் காட்டிலும் வாய்மொழி மூலத் தொடர்பாடல்கள் பெரிதும் சிதைவடைகின்றன." இதற்கான காரணங்கள் நான்கினைத் தருக.

(5 x 4 = 20 புள்ளிகள்)



kalvi.lk

***(04)***

i) நெருக்கடியான நகரப்புறமொன்றில் வணிகர் ஒருவர் சமையல் எரிவாயு கொள்கலன்களினை கையாளும் களஞ்சியசாலையொன்றை நிறுவ முற்பட்ட போது அதற்கான அனுமதி மறுக்கப்பட்டது.

அ) அனுமதி மறுக்கப்பட்டமைக்கான காரணங்கள் நான்கினைத் தருக.

ஆ) மேற்குறித்த களஞ்சியசாலைகளை அமைக்கும் போது அனுமதி பெறப்பட வேண்டிய அமைப்புக்கள் நான்கினைத் தருக.

ii)

அ) போக்குவரத்துக்கும் ($Transportation$), ஏற்பாட்டியலுக்கும் ($Logistics$) இடையிலான வேறுபாட்டினை சுருக்கமாக விளக்குக.

ஆ) இன்று பொருட்களை நாடு முழுவதும் நகர்த்திச் செல்வதற்கு கொள்கலன்கள் ($containers$) பெருமளவு பயன்படுத்தப்படுவதனால் கிடைக்கும் அனுகூலங்கள் நான்கினைத் தருக.

iii) அண்மைய சில ஆண்டுகளாக புதிய வாகனங்களின் இறக்குமதிக்கு அரசு தடைகளினை விதித்துள்ளதன் காரணமாக, வணிகர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் தலா நான்கு வீதம் குறிப்பிடுக.

iv)

அ) சர்வதேச நாணய நிதியத்தின் ($IMF$) தொழிற்பாடுகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தை மேம்படுத்துவதற்கு கடைப்பிடிக்கக்கூடிய தந்திரோபாயங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

v) சர்வதேச அமைப்புக்களும், வியாபார ஒப்பந்தங்களும் வெளிநாட்டு வியாபாரத்தில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இவ்வாறான தாக்கங்களினால் ஒரு நாட்டுக்கு ஏற்படும் சாதகமான, பாதகமான நிலைமைகள் தலா நான்கு வீதம் தருக.

(5 x 4 = 20 புள்ளிகள்)

## பகுதி ஆ

***(05)***

i) கம்பனியொன்றில் புதிதாக பொது முகாமையாளராக அமர்த்தப்பட்ட கஜன் என்பவர். அனைத்து தீர்மானங்களும் ஒரு முகப்படுத்தப்பட்டு உயர்மட்ட முகாமையினால் மட்டுமே எடுக்கப்படல் வேண்டுமெனக்கருதி அதிகாரங்கள் பலவற்றை தம்மிடமே வைத்துக் கொள்ள முற்படுகின்றார்.

அ) "அதிகாரம்" ($Authority$) என்பதனால் கருதப்படுவது யாது?

ஆ) மேற்படி பொதுமுகாமையாளர் அதிகாரங்களை தானே வைத்திருத்தல் அதிகார கையளிப்பில் எவ்வாறு அழைக்கப்படுமெனவும், அதனால் ஏற்படக்கூடுமென்கின்ற பிரதி கூலங்கள் மூன்றினையும் குறிப்பிடுக.

ii) "சிறந்த முகாமையாளர்களிடம் அறிவு, திறன் நேர்மனப்பாங்கு ஆகியன பெரிதும் எதிர்பார்க்கப்படுவதுண்டு.

அ) திறன் ($Skill$) என்பதனை விளக்கி முகாமையாளரிடம் காணப்படும் பொதுவான திறன்கள் மூன்றினைத் தருக.

ஆ) மேற்குறிப்பிட்ட பொதுவான திறன்களினை விட இன்று முகாமையாளருக்கு தேவைப்படும் மேலதிக திறன்கள் நான்கினைத் தருக.



kalvi.lk

iii) தயாரிக்கப்பட்ட திட்டமொன்று இலகுவாகவே நடைமுறைப்படுத்தி வெற்றியடைவதற்கு, அத்திட்டம் கொண்டிருக்க வேண்டிய அடிப்படைத் தத்துவங்கள் நான்கினைத் தருக.

iv) பாடசாலை வணிகதின விவாத அரங்கொன்றில், "இலக்குகளை சரியாக அடைவதற்கு திட்டமிடலா அல்லது கட்டுப்படுத்தலா முக்கியமானது" என்ற தலைப்பில், நீர் கட்டுப்படுத்தலே முக்கியமானதென்ற அணியினை பிரதிநிதித்துவப்படுத்துவதாக கருதி, கட்டுப்படுத்தலின் முக்கியத்துவங்கள் நான்கினை முன்வைக்குக.

v) "நிறுவன உயர்மட்ட முகாமையாளர்கள் தமது பணிநேரத்தில் 85% இற்கு மேற்பட்ட நேரங்களை முறைசார்ந்த தொடர்பாடலுக்காகவே செலவிடுவதாக ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன."

அ) நிறுவன அமைப்புக்களில் இடம் பெறும் முறைசார்ந்த, முறைசாராத தொடர்பாடல்களை உதாரணம் ஒன்றினூடாக சுருக்கமாக விளக்குக.

ஆ) முறைசாராத் தொடர்பாடலில் எவையேனும் நான்கு பிரதிகூலங்களினைத் தருக.

(5 x 4 = 20 புள்ளிகள்)

***(06)***

i) "செயற்பாட்டு முகாமைத்துவத்தில் முக்கியத்துவம் பெறுவதே உற்பத்தித்திட்டமிடல் என்பதாகும்."

அ) உற்பத்தியாளர் ஒருவர் உற்பத்தித் திட்டங்களை தயார் செய்யும் போது கருத்தில் கொள்ளும் நான்கு காரணிகளைத் தருக.

ஆ) மிகப்பொருத்தமான உற்பத்தித்திட்டமிடலினால் உற்பத்தியாளருக்கு கிடைக்கும் நன்மைகள் நான்கினைத் தருக.

ii) சிரோசன் என்பவர் வெப்தளங்களை உருவாக்குவதற்கான வணிகமொன்றின் உரிமையாளர் ஆவார். வணிக நிறுவனங்கள் பாடசாலைகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கு வெப்தளங்களை வடிவமைப்பதன் மூலம் மதுமிதன் பிரபல்யமாகியுள்ளார்.

அ) சிரோசன் பயன்படுத்தும் உற்பத்தி முறையினைக் குறிப்பிட்டு, அதன் மூன்று அனுகூலங்களையும் தருக.

ஆ) சிரோசன் தனது வணிகத்திற்கான தள அமைப்பினை சிறப்பாக வடிவமைப்பாராயின், அதன் மூலம் அவருக்கு கிடைக்கும் நான்கு நன்மைகளினைத் தருக.

iii) மிகர்சன் அல்வா உற்பத்தி நிறுவனத்தின் உற்பத்தி தொடர்பிலான தகவல்கள் சிலவருமாறு,

| | |
|---|---|
| கட்டளைக்கிரயம் (ஒரு கட்டளைக்கு) - | *5 ரூபா* |
| அலகுக்கிரயம் | *50 ரூபா* |
| பேணும் கிரயம் (ஒரு அலகுக்கு) அலகு கிரயத்தில் 20% | |
| வருடாந்த கேள்விக்கேற்ப உற்பத்தி *15000* அலகுகள் | |
| மதிப்பீடு செய்யப்பட்ட விற்பனைப்பெறுமதி | *12,00,000 ரூபா* |
| மொத்த மாறும் செலவு | *600,000 ரூபா* |
| மொத்த நிலையான செலவு | *200,000 ரூபா* |

பின்வருவனவற்றை கணிப்பிடுக.

அ) பொருளாதாரக் கட்டளைக்கணியம்

ஆ) இலாபம்

இ) அலகுக்கான பங்களிப்பு

ஈ) சமப்பாட்டுப்புள்ளி அலகுகள்



kalvi.lk

iv) வினோசனினால் கடந்த பத்தாண்டுகளுக்கு முதல் ஆரம்பிக்கப்பட்ட பிஸ்கட் உற்பத்திப்பொருள் தற்போது உற்பத்திப் பொருள் வாழ்க்கைவட்ட கட்டத்தில் முதிர்ச்சிக்கட்டத்தினை அடைந்துள்ளது. இவர் இக்கட்டத்திலிருந்து மீண்டு விற்பனைகளை அதிகரிக்கச் செய்வது தொடர்பில் அதிக கரிசனை செலுத்துகின்றார்.

அ) முதிர்ச்சிக்கட்டத்தில் காணப்படும் உற்பத்திப் பொருளொன்றின் குணாம்சங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

ஆ) சந்தையில் புதிய சுவையுடன் கூடிய புதிய பிஸ்கட் அறிமுகுத்திற்கு வந்திருத்தலே, தனது பிஸ்கட் முதிர்ச்சிக் கட்டத்தினை அடைந்தமைக்கு காரணமென வினோசன் உணருகின்றார். இதனை எதிர்கொள்வதற்கு வினோசனால் எடுக்கப்படக் கூடிய நான்கு தந்திரோபாயங்களினைத் தருக.

v) தனது புதிய வித்தியாசமான வடிவமைப்பினையுடைய உற்பத்திப்பொருள் ஒன்றுக்கு பொதியமைப்பது தொடர்பிலான குழப்பங்களுக்கு தேசிய பொதி கட்டல் நிலையம் $(NPC)$ ஊடாக சிறந்த தீர்வினை உற்பத்தியாளராகிய அச்சுதன் பெற்றுள்ளார்.

அ) பொதியிடலை உருவாக்கும் போது கருத்தில் கொள்ளும் நான்கு காரணிகளினைத் தருக.

ஆ) சிறந்த பொதியொன்றின் ஊடாக வாடிக்கையாளருக்கு கிடைக்கும் அனுகூலங்கள் நான்கினைத் தருக.

(5 x 4 = 20 புள்ளிகள்)

**(07)**

i) அ) "ஏனைய சந்தைப்படுத்தல் கலவை மாறிகளின் வெற்றியினை மேம்படுத்தலே தீர்மானிப்பதுண்டு." மேற்படி கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? அவ்வாறாயின் விளக்குக.

ஆ) வாடிக்கையாளர்களினை கொள்வனவு செய்ய தூண்டுவதான மேம்படுத்தல் கலவை மாறியின் கூறுகள் நான்கினைத் தருக.

ii) "நிதி முகாமைத்துவக் கருமங்களினை சிறப்பாக ஆற்றுவதன் ஊடே, நிதி முகாமை தமது அடிப்படை நோக்கங்களை இலகுவில் அடைய முடிவதுண்டு."

அ) நிறுவன நிதி முகாமையினால் ஆற்றப்படும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய நிதி முகாமைத்துவக் கருமங்கள் நான்கினைத் தருக.

ஆ) மேற்படி நிதி முகாமைத்துவ கருமங்களை ஆற்றுவதன் ஊடாக, அடையப்படும் நிதிமுகாமைத்துவ நோக்கங்கள் நான்கினைத் தருக.

iii) "நிதி முகாமையின் வெற்றி, நிதி முகாமைத்துவ தீர்மானங்களிலேயே தங்கியுள்ளது."

அ) முதலீட்டுத் தீர்மானம் என்பதனை வரையறுத்து இத்தீர்மானம் மேற்கொள்ளும் போது கருத்தில் கொள்ளும் இரு காரணிகளைக் குறிப்பிடுக.

ஆ) நிதியீட்டல் தீர்மானம் என்பதனை வரையறுத்து, இத்தீர்மானம் மேற்கொள்ளும் போது, கருத்தில் கொள்ளும் இரு காரணிகளைக் குறிப்பிடுக.

iv) "பொருளாதாரமொன்றில் நிதித்தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள பல்வேறு முறைப்படுத்தப்பட்ட கூறுகளின் தொகுதியே நிதிமுறைமை என்பதாகும்."

அ) நிதி முறைமையின் பிரதான கூறுகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) நிதி முறைமையின் பிரதானமான பணியாக இருப்பதே "நிதி இடைத்தரகுபடுத்தல்" $(Financial\ Intermediation)$ என்பதாகும். நிதி இடைத்தரகுபடுத்தல் என்பதனை சுருக்கமாக விளக்குக.



kalvi.lk

v) “பட்டியற்படுத்தப்பட்ட பொதுக்கம்பனிகளின் பங்குகள், தொகுதிக்கடன்கள் போன்ற பிணைப்பத்திரங்களை கொள்வனவு, விற்பனை செய்யும் பிரத்தியேகமான இடம் பங்குசந்தை என்பதாகும்.”

அ) முதலாம் தர பங்குச்சந்தைக்கும் , இரண்டாம் தர பங்குச்சந்தைக்கும் இடையிலான நான்கு வேறுபாடுகளைத் தருக.

ஆ) நாடொன்றின் பொருளாதார விருத்திக்கு பங்குச்சந்தை முக்கியத்துவம் பெறுவதற்கான நான்கு காரணங்களைத் தருக.

(5 x 4 = 20 புள்ளிகள்)

***(08)***

i) பின்வரும் நிதி விகிதங்களின் எதிர்பார்க்கப்பட்ட மற்றும் உண்மையான நிலைமைகளை ஒப்பிடுவதன் மூலம் அது தொடர்பான உமது கருத்துக்களைத் தந்து, எதிர்பார்க்கப்பட்ட நிலையை அடைவதற்கு ஒவ்வொரு நிலைமைகளின் போதும் எடுக்க வேண்டிய ஒரு நடவடிக்கை வீதம் ஆலோசிக்குக.

| | விகிதம் | எதிர்பார்க்கப்பட்ட நிலைமை | உண்மை நிலைமை |
|---|---|---|---|
| *1.* | சரக்குபுரள்வு (தடவை) | *4* | *1* |
| *2.* | கடன் சேகரிப்பு (தடவை) | *4* | *2* |

ii) தனியார் வைத்திய சேவையினை நடாத்தி வரும் "Dayana Central Nursing Home (PVT) Ltd" இல் தற்போது *50* ஊழியர்கள் காணப்படுவதுடன், ஒரு ஊழியருக்கு *03* கட்டில்கள் எனும் அடிப்படையில் *150* கட்டில்களும் காணப்படுகின்றன. எதிர்வரும் ஆண்டில் கட்டில்களின் எண்ணிக்கையினை 20% மாக அதிகரிக்க வைத்திசாலை நிர்வாகம் தீர்மானித்துள்ளது. அதே நேரம் *12* ஊழியர்கள் தமது இராஜினாமாக் கடிதங்களை சமர்ப்பித்திருந்ததுடன், *03* ஊழியர்கள் அடுத்தாண்டில் இளைப்பாறவும் உள்ளனர். அதே நேரம் *05* ஊழியர்கள் மேற்பார்வையாளர்களாக பதவி உயர்த்தப்படவும் உள்ளனர். நிறுவன ஆட்சேர்ப்பு கொள்கையின் படி 40%மான ஊழியர்கள் வெளியிலிருந்தே பெற்றுக் கொள்ளப்படுவதுண்டு.

அ) இவ் வைத்தியசாலையில் உள்ளிருந்து ஆட்சேர்க்கப்படும் ஊழியர்கள் எத்தனை?

ஆ) உள்ளிருந்து ஆட்சேர்ப்பதனால் கிடைக்கும் நான்கு அனுகூலங்களைத் தருக.

iii)

அ) மேற்படி வைத்தியசாலையில் வெளியிலிருந்து ஆட்சேர்க்கப்படும் ஊழியர்கள் எத்தனை?

ஆ) வெளியிலிருந்து ஆட்சேர்ப்பதனால் கிடைக்கும் பிரதிகூலங்கள் நான்கினைத் தருக.

iv) அமைய ஊழியர்களை (Casual employees) ஆட்சேர்ப்பு செய்வதனூடாக நிறுவனமொன்றிற்கு ஏற்படக்கூடிய நான்கு அனுகூலங்களையும், நான்கு பிரதிகூலங்களையும் தருக.

v) ஏனைய வளங்களுடன் ஒப்பிடுமிடத்து மனிதவளங்களில் காணப்படும் விஷேட பண்புகள் நான்கினைத் தருக.

(5 x 4 = 20 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page